# நிலமே நலமாக. . .

## (நாடகம்)

### காட்சி - 1

இடம்: பீட்டர் வீடு; பாத்திரங்கள்: பீட்டர், பீட்டரின் மனைவி மேரி, பீட்டரின் மகன் கென்னடி, மகள் எமிமா

(பீட்டர் கையில் ஒரு சிறிய பெட்டியுடன்)

**பீட்டர்** : மேரி. . . மேரி. . . நான் கிளம்பட்டுமா? எனக்கு நேரமாகிறது. . .

(மேரி வருதல்)

**மேரி** : என்னங்க. . . கொஞ்சம் இருங்க. . . எங்க அப்பாவைப் பார்க்க கிராமத்துக்குப் போறீங்க. . . எத்தனையோ வருடங்கள் கழித்துப் போறீங்க. . . எங்க அப்பாவுக்குப் பிடித்த பண்டங்கள் தாரேன். . . கொண்டு போங்க. . .

**பீட்டர்** : இந்தா பாருடா. . . ! நான் உங்க அப்பாவை என் அலுவலக விஷயமாகத்தான் பார்க்கப் போறேனே தவிர உறவு கொண்டாடப் போகலை. . . நீ அடுத்த விடுமுறைக்குப் போகும்போது எல்லாவற்றையும் கொண்டு போ. . .

(கென்னடி வருதல்)

**கென்னடி** : (இருமிக் கொண்டே. . .) டாடி. . . டாடி. . . தாத்தா வீட்டுக்காப் போறீங்க. . .

**பீட்டர்** : ஆமாண்டா செல்லம். . . ஏய் மேரி, இன்றைக்கும் காற்று அதிக அளவு மாசுப்பட்டு இருக்கன்னு செய்தியிலே சொன்னாங்க இல்லையா. . . பிள்ளைகளுக்கு மூச்சு கவசத்தைப் போட்டு விடு. . . இருமுறான் பாரு. . .

**மேரி** : சரிங்க. . . மரங்களை வெட்டி, மாடிமாடியாக் கட்டி, சிட்டியாக்கி. . . உயிர்மூச்சுக்கே உலை வைக்கிறாங்க. . . இந்த மனுஷங்க! படித்திருந்தும் புத்தி கெட்ட மனிதர்கள்!

**பீட்டர்** : இந்தாப் பாருடா! கிராமத்து கீதம் இசைக்கத் தொடங்கிட்டு. என் மகள் எமிமாவை எங்கே? . . . எமிமா. . . எமிமா. . .

(எமிமா அலைபேசியில் விளையாடிக் கொண்டே தலைக் கவசத்துடன் வருதல்)

**எமிமா** : டாடி. . . எனக்கு பீட்ஸா. . . பர்க்கர். . . எல்லாம் வாங்கிட்டு வாங்க. . .

**பீட்டர்** : நான் போகும்போதே ஆர்டர் கொடுத்துவிட்டுப் போகிறேன். வீட்டுக்கு வந்துவிடும். நீ செல்போனில் ரொம்ப நேரம் கேம் விளையாடதே சரியா!

**எமிமா** : அண்ணன் மட்டும் கம்யூட்டர்ல விளையாடுகின்றான்! எனக்கும் போரடிக்கும்ல டாடி. . .

**பீட்டர்** : "அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு" பார்த்துக்குங்க! மேரி! பிள்ளைகளைப் பார்த்துக்கோ. . . நான் கிளம்பறேன்!

## காட்சி - 2

இடம்: இயலூர் கிராமம்
பாத்திரங்கள்: பீட்டரின் மாமனார், பீட்டர், உறவுகள் 2 பேர்
(ஏற்கெனவே பேசிக் கொண்டு இருத்தல்)

**பீட். மாமா** : மாப்ள. . . நீங்க சொல்றதைப் பார்த்தா. . . ஒவ்வொரு விவசாயிக்கும் நிறைய பணம் கிடைக்கும்னு நினைக்கிறேன்.

**பீட்டர்** : ஆமாம் மாமா! இப்ப மழையும் அவ்வளவாக பெய்யவில்லை. அங்கங்கப் பார்த்தா, கருகிய பயிர்களைப் பார்த்து உருகிய மனது நொறுங்கி எத்தனை தற்கொலைகள்! இதற்கு மாற்றாகத் தான் யோசிச்சு இந்த முடிவை எங்க நிர்வாகம் எடுத்திருக்கு!

**சித்தப்பா** : தம்பி. . . நீங்க எங்க நிலத்தை வாங்கி அப்படி என்னதான் செய்யப் போறீங்க!

**பீட்டர்** : சித்தப்பா. . . வானம் பார்த்த இந்த பூமி வறண்டு போறதுக்குள்ள நல்ல ஊற்றெல்லாம் தோண்டி. . . மரங்கள் வைத்து பிளாட்டு போட்டு வீடுகள் கட்ட எங்க நிர்வாகம் முடிவு எடுத்திருக்கு. . .

**மாமா 2** : அதெல்லாம் சரிதான் மருமகனே! ஏற்கெனவே வயல்வெளிகள் இருந்த இடம் சரியான பள்ளம் . . . காணாக் குறைக்கு பக்கத்துல குளம் வேற இருக்கு. . . இன்னைக்கு வானம் பொய்த்தாலும் நாளைக்கு எப்பவாவது மழை பெய்தால். . . சென்னையில வெள்ளம் சூழ்ந்த மாதிரி. . . பெரும் ஆபத்து வருமில்ல. . .

**பீட்டர்** : நீங்க நல்ல கேள்வி கேட்டீங்க மாமா! அதற்குத் தான் எங்க உருக்காலையில் நல்ல திட்டம் ஒன்று போட்டிருக்காங்க! 'வெள்ளம் வருமுன் அணை போடு' என்ற பழமொழிக்கு ஏற்றாற்போல் நிலத்தை மேடாக்கிட்டுதான் சிட்டியையே உருவாக்குவாங்க! . . .

**பீட். மாமா** : சரி. . . மாப்ள. . . நீங்கள் எல்லாம் படிச்சவங்க! திட்டம் போட்டுச் செய்வீங்க. . . நாங்கள என்ன செய்யணும்?

**பீட்டர்** : இப்ப. . . இந்த பெட்டிய பிடிங்க. . . ஊர்ப் பெரியவங்ககிட்ட பேசுங்க. . . பிறகு நிலத்துக்குச் சொந்தக்கார விவசாயிகளின் வங்கி கணக்கு எண் எல்லாம் வாங்கி அனுப்புங்க. . . எல்லாருக்கும் பெருந்தொகையை எங்க நிர்வாகம் போட்ரும்! அது பற்றி எழுதிய இந்த ஒப்பந்த பத்திரத்துல கையெழுத்து வாங்கித் தாங்க மாமா! நான் காத்திருக்கேன்!

**எல்லாரும்** : சரி. . . சரி. . . நாங்க வர்றோம்.

## காட்சி - 3

இடம்: பீட்டரின் அலுவலகம்
பாத்திரங்கள்: மேலாளர், பீட்டர்

**பீட்டர்** : குட் மார்னிங் சார்! இயலூர் கிராமத்துல போய் நான் பேசி முடித்துவிட்டேன். . .

**மேலாளர்** : வெரி குட் பீட்டர். . . ஒப்பந்த பத்திரத்துல கையெழுத்து வாங்கி வந்து விட்டீர்களா?

**பீட்டர்** : யெஸ் சார்! இதோ பத்திரம்! மேலும் நில உடைமையாளர்களின் வங்கிக் கணக்கு எண்ணையும் வாங்கி வந்துவிட்டேன்.

**மேலாளர்** : அது இருக்கட்டும். . . முதல்ல பத்திரத்தைத் தாங்க. . .

(வாங்கிப் பார்த்தல்)

வாவ்! பீட்டர் நீங்கள் அரிய காரியத்தை செய்து முடித்து வீட்டீங்க!

**பீட்டர்** : அப்படியென்ன சார் சாதித்துவிட்டேன்?

**மேலாளர்** : நாங்க ஐந்து வருடமாக இந்த இயலூர் கிராமத்தை வளைத்துப் போட எண்ணி எத்தனையோ முறை முயற்சி செய்தோம். ஆனா வெற்றி பெற முடியவில்லை. . . ஆனா நீங்க உங்க உறவுகளைப் பயன்படுத்தி மிக எளிதில் முடித்துவிட்டீர்கள். பாராட்டுகள்! இந்தாங்க உங்களுக்கு நம்ம நிர்வாகம் சார்பாக இந்தப் பரிசு!

(வைர நெக்லஸ் கொடுத்தல்)

**பீட்டர்** : தேங்க் யூ சார்!

## காட்சி - 4

இடம்: பீட்டர் வீடு
பாத்திரங்கள்: பீட்டர், மேரி, கென்னடி, எமிமா, பீட்டரின் மாமனார்

**எமிமா** : டாடி. . . ஊருக்குப் போயிட்டு வந்து விட்டீர்களா? தாத்தா நல்லா இருக்காங்களா?

**பீட்டர்** : நல்லா இருக்காங்க. . . மம்மியை எங்கே?

**எமிமா** : மம்மியும் அண்ணனும் சர்ச்க்கு போயிருக்காங்க. . .

**பீட்டர்** : ஐயோ! வெளியில. . . காற்று மாசு அதிகமாக இருக்குதே. . . கென்னடிக்குப் பிடிக்காதே! மூச்சுக் கவசமும் ஒழுங்கா போட மாட்டானே!

**எமிமா** : சரியா சொன்னீங்க டாடி. . . நேற்று ராத்திரியெல்லாம் ஒருத்தரையும் தூங்கவிடாம இருமிக்கிட்டே இருந்தான். வீட்டிலே இருந்து டி.வி.யில திருப்பலி பார்க்கலாம். . . செல்போனில் பைபிள் வாசிக்கலாம். . . சர்ச்சுக்குப் போக வேண்டாம்னு சொன்னேன் டாடி. . . வானத்தைப் பார்த்து பத்து நாள் ஆகிவிட்டதுன்னு சொல்லி மம்மி கூட ஓடிட்டான் டாடி. . . வந்தவுடனே அடிங்க டாடி. . .

(மேரியும் கென்னடியும் வருதல்)

**கென்னடி** : (இருமிக் கொண்டே. . .) டாடி வந்தாச்சு. . . டாடி வந்தாச்சு. . .

**பீட்டர்** : இந்தா பாருடா. . . மேரி நீ ஏன் கென்னடியையும் கோயிலுக்குக் கூட்டிட்டுப் போனே!

**மேரி** : என்னங்க. . . எப்பவும் வீட்டுக்குள்ளே அடைஞ்சு இருந்து. . . செயற்கைக் காற்றை சுவாசித்து. . . செயற்கை ஒளியிலே கண்கள் கண்டு. . . சே. . . நரகம். . . அதான் அவனையும் அழைச்சுகிட்டுப் போனேன். . . இயற்கையாக இருக்கிற வானத்தை மட்டுமாவது பார்க்கட்டுமேன்னுதான்!

**பீட்டர்** : இந்தா பாருடா! கிராமத்து கீதம் இசைக்குது! வீட்ட விட்டு வெளியில போனா. . . எல்லாமே மாசுபட்டு கிடக்கு. . . அதனால நம்ம பிள்ளைய நோய்கள் தாக்கும் என்ற கவலையிலதான். . . கேட்டேன்!

**மேரி** : நிலம், நீர், காற்று மாசுபட யார் காரணம்? கடவுள் படைச்ச இயற்கையைப் பாழாக்கியது யார்? சுயநலம் பிடித்த, படித்தும் புத்திகெட்ட மனிதர்கள் தானே! அந்த சுயநலமும் எப்படிப் பட்டது தெரியுமா? தான் மட்டும் வாழ்ந்தால் போதும். . . தன் வாரிசுகள் கூட வாழ வேண்டாம் என்ற அளவில் இருக்கின்றது.

**பீட்டர்** : இந்தா பாருடா! லெக்சர் அடிக்க ஆரம்பிச்சுட்டா உங்க அம்மா! இப்ப அவ வாயை அடைக்கட்டுமா?

**கென்னடி** : எப்படி டாடி?

**எமிமா** : ஏதாவது மேஜிக் வைச்சிருக்கீங்களா டாடி?

**பீட்டர்** : ஆமாம் மேஜிக்தான். . . டட்டடடங். . . இங்க பாருங்க! மேரிக்கு இந்த பீட்டரின் பரிசு வைர நெக்லஸ்.

**மேரி** : ஆ. . . என்ன அழகா இருக்கு! நான் மனதுக்குள்ளே அடிக்கடி ஆசைப்பட்டேன்! என் ஆசை நிறைவேறிவிட்டதே! இது கனவா? அல்லது நனவா?

(நெக்லஸ் அணிதல்)

**பீட்டர்** : கிள்ளிப் பாரு. . . நனவு தான். . . வானத்துத் தேவதையே இறங்கி வந்த மாதிரி இருக்கிறாய். . .

(மேரியும் பீட்டரும் நடனமாடுதல்)

(பீட்டரின் மாமனார் வருதல்)

**பீட். மாமா** : மேரி. . . மாப்ள. . .

**மேரி** : அப்பா. . . வாங்க. . . வாங்க. . . போன வாரம் தானே உங்க மாப்ள உங்களைப் பார்க்க வந்தாங்க! இது நல்லா இருக்கா அப்பா? இவர் வேலையைப் பாராட்டி, நிர்வாகம் கொடுத்த பரிசு. . .

**பீட். மாமா** : அம்மா மேரி. . . அது பாவத்தின் விலை. . . தெரியாம உன் மாப்பிள்ளையை வீழ்த்திய வலை!

**பீட்டர்** : மாமா. . . என்ன சொல்றீங்க?

**பீட். மாமா** : மாப்ள. . . தப்பு பண்ணிட்டோம்! மாப்ள தப்பு பண்ணிட்டோம்! மாப்ள நீங்க கிளம்பிய கொஞ்ச நேரத்திலேயே உங்க

தொழிற்சாலையில தயாரா வைத்திருந்த கழிவுகளை எல்லாம் எங்க ஊர் வயலில் கொட்ட வந்துட்டாங்க! மண்ணை வெட்டி உணவை உருவாக்கிய எங்க ஊர் விவசாயிகள் வேறு வேலை இல்லாததால் குவியல், குவியலாய் இருந்த கழிவுகளை கூலிக்கு நிரத்திப் போடச் சென்றனர். . . வேலைத் தொடங்கிய அரைமணி நேரத்திற்குள் ஒவ்வொருத்தரா மூக்கில் இரத்தம் வர மயங்கி விழுந்தனர். . .

**மேரி** : ஐயய்யோ. . . அப்புறம்!

**பீட். மாமா** : மருத்துவமனைக்குக் கொண்டுட்டு போறதுக்குள்ள மூன்று பேர் இறந்துட்டாங்க! இப்ப ஏழு பேர் கவலைக்கிடமா. . . உயிருக்குப் போராடிட்டுக் கிடக்காங்க!

**பீட்டர்** : டாக்டர்ஸ் என்னச் சொன்னாங்க?

**பீட். மாமா** : கழிவுகளில் இருந்த வேதிப்பொருள்களால் தான் இந்த தீய விளைவுகள்னு சொன்னாங்க. . . இன்றைக்கே இப்படின்னா. . . நாளைக்கு அதுமேல மண்ணைப் போட்டு பிளாட்டு உருவாக்கி வீடு கட்டி குடும்பங்கள் வாழ ஆரம்பித்தால் உயிருக்கும் உடலுக்கும்உத்திரவாதம் இருக்காதே மாப்பிள்ளை!

**மேரி** : என்னப்பா சொல்றீங்க!

**பீட். மாமா** : மேரி. . . மாப்பிள்ளையை பகடைக் காயா வைத்து அவுங்க கம்பெனி, நாங்க ஐந்து வருடங்களா எதிர்த்த திட்டத்தை நம்மூர் மண்ணிலே செயல்படுத்திட்டு. . . சூழ்நிலையைப் பயன்படுத்தி விவசாயிகளை முடக்கிப் போட்டுட்டு. . . மனுஷன் செத்த பிறகுதான் அவனப் புதைச்சு அப்புறமா கல்லறைக் கட்டுவாங்க! ஆனா. . . இவுங்க தொழிற்சாலை நிர்வாகம். . . வேதிக் கழிவுகளைக் கொட்டி, அதன் மேலே தாது எடுத்த மணலைப் பரப்பி. . . சவக்குழி மாதிரி பூமித் தாயை மாற்றி அதன் மேல வீடு கட்டப் போகுதாம். இறைவன் படைத்த உயிரினைப் பறிக்க எத்தனை எளிதான வழியின்னு பார்த்தியாம்மா!

**பீட்டர்** : அதுக்கு நான் என்ன செய்யணும் மாமா!

**பீட். மாமா** : மாப்ள, நீங்கதான் ஒப்பந்தம் வாங்கிக் கொடுத்தீங்க! அத நீங்க வாபஸ் வாங்கிட்டீங்கன்னா நம்ம வயல்வெளிகள் அழிவதையும், விவசாயிகள் நம்ம வாரிசுகள் மடிவதையும் தடுக்க முடியும். . . பிளீஸ் மாப்பிள்ளை!

**மேரி** : இந்தாங்க. . . நீங்க தந்த நெக்லஸ். . . போய் கொடுத்திட்டு ஒப்பந்த பத்திரத்தை வாங்கிட்டு வாங்க!

**பீட்டர்** : அதெப்படி என்னால முடியும். . . இயலூர் தானே பாதிக்கப்பட போகுது. . . மாமா பேசாம நீங்க இங்க வந்திருங்க! யாரும் எக்கேடா கெட்டா உங்களுக்கு என்ன? உங்க பொண்ணு நல்லா இருக்காளான்னு மட்டும் பாருங்க!

**பீட். மாமா** : மாப்ள. . . நீங்க படிச்சவங்க. . . கொஞ்சம் தொலைநோக்கோடு சிந்தியுங்க! இன்றைக்கு இயலூர்னா. . . நாளைக்கு செயலூர்ன்னு ஒவ்வொரு ஊரா அழிஞ்சிரும். . . கையில பணம்

இருந்து வாயில வைக்க சோறு இல்லாமப் போனா வயிறுதான் சும்மா இருக்குமா! வாழ்வுதான் நமக்கு இருக்குமா! நம்ம சந்ததிதான் பிழைச்சிருக்குமா!

**பீட்டர்** : (கத்துதல்) மாமா நீங்க என்ன சொன்னாலும் சரி. . . நான் முன் வைச்சக் காலை பின் வைக்க மாட்டேன்! எல்லாரும் என்னைய தனியா விடுங்க. . . போங்க. . . போங்க. . .

## காட்சி - 5

இடம்: பீட்டர் வீடு
பாத்திரங்கள்: பீட்டர், எமிமா, மேரி, கென்னடி, பீட்டரின் மாமனார்
(பீட்டர் சோகமாக அமர்ந்திருத்தல்)

**எமிமா** : (அலைப் பேசியுடன் வருதல்) டாடி. . . டாடி. . . எனக்குப் பைபிளில் ஒரு விளக்கம் தேவைப்படுது!

**பீட்டர்** : என்னம்மா சொல்லு?

**எமிமா** : இயேசு, “வானத்துப் பறவைகளை நோக்குங்கள், காட்டு மலர்ச் செடிகள் எப்படி வளருகின்றன எனக் கவனியுங்கள்” என்று சொல்லிருக்கிறாரு டாடி! அதில் பறவைனா என்னப்பா? அது எப்படி இருக்கும்? நம்ம சிட்டியிலே இருக்கா?

**பீட்டர்** : (யோசித்தல்) மனிதருக்கே வெளியில் செல்ல முடியாமல் காற்று மாசு அதிகம் இருக்கே. . . பறவைகள் எப்படி வாழ முடியும். . . எமிமா. . . நம்ம சிட்டியிலே பறவைகள் இல்லையேம்மா!

**எமிமா** : சரி. . . அதுதான் இல்லை. . . காட்டு மலர்ச் செடிகள் எப்படி இருக்கும் டாடி?

**பீட்டர்** : எமிமா! என்னை மன்னிச்சிடும்மா! பறவை, வயல்வெளி என்ற இயற்கை அழிய நானும் ஒரு விதத்தில் காரணம் ஆயிட்டேன்! இப்பதான் என் புத்தியில உரைக்குது. . . இந்த இயற்கை எல்லாம் என் மகள் உனக்கே தெரியாத அளவுக்கு ஆகிவிட்டதே! ஐயகோ! இனிவரும் தலைமுறைகள் நிலை என்ன ஆகும்! ஐயோ! நினைக்கவே பயமா இருக்கிறதே! இன்றே இயற்கையைக் காக்க முடிவெடுக்கப் போகிறேன்!

**எமிமா** : என்ன முடிவு டாடி!

**பீட்டர்** : மாமா. . . மாமா. . .

(பீட்டர் மாமா, மேரி, கென்னடி வருதல்)
(கென்னடி இருமிக் கொண்டே இருத்தல்)

**பீட். மாமா** : என்ன மாப்ள?

**பீட்டர்** : மாமா. . . என்னை மன்னிச்சிடுங்க! ‘இயற்கை தான் நம்மள வாழ வைக்கும் விசித்திரம்’ என்பது இப்போதுதான் என் மண்டையிலே உரைத்தது. நீங்க மேரியையும், பிள்ளைகளையும் கூட்டிகிட்டு ஊருக்குப் போங்க. . .

**மேரி** : அப்ப நீங்க!

**பீட்டர்** : நான் போய் மேனேஜரைப் பார்த்து ஒப்பந்தத்தை வாபஸ் வாங்கிட்டு வாரேன். நம்மளால முடிந்த அளவு இயற்கையை அழியவிடாமல் ரூபனி, நம் நிலம் நலமாக தொடர்ந்து உழைப்போம்.

**மேரி** : சரி. . . நாங்க கிளம்பறோம். நீங்கள் சென்று வெற்றியோடு திரும்புங்கள். . . இயற்கையைக் காப்பதில் முன்மாதிரியாய் நம் குடும்பம் விளங்கட்டும்.

**பீட். மாமா** : தடைகளைத் தகர்த்து இறைவன் தந்த கொடைகளை முன்மதியோடு காப்போம்!

**எமி.& கென்.**: நோயின்றி நீண்ட நாள் உயிர் வாழ்ந்திட நிலத்தின் நலத்தைக் காப்போம்!

*முற்றும்*

**அ. ஜான்ஸிமேல்**
*தூத்துக்குடி மறைமாவட்டம்*

